## செங்கல்பட்டு மாவட்டத்தில் கோத்ரேஜ் குழுமம் ரூ.515 கோடியில்

# உலகத்தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை அமைக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**சென்னை, ஆக. 11-**

**கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டத்தில், ரூ.515 கோடி முதலீடு மற்றும் 446 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் புதிய உற்பத்தி ஆலை நிறுவுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந் துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (10.8.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சி யில், கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டத்தில் 515 கோடி ரூபாய் முதலீட்டில் 446 நபர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகை யில் உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு அரசு மற்றும் கோத் ரேஜ் குழுமத்திற்கும் இடையே மேற்கொள் ளப்பட்டது.

**முதலீடுகள் மேற்கொள்வதற்கு உகந்த மாநிலம் தமிழ்நாடு!**

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கிவரும் தமிழ்நாடு, தானியங்கி வாகனங்கள், ஜவுளி, காலணி மற்றும் தோல்பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், புதுப்பிக் கத்தக்க எரிசக்தி, வான்வெளி மற்றும் பாது காப்பு என பல்வேறு வகையான தொழில் களை நிறுவிட ஊக்கமளிப்பதன் மூலம், முத லீடுகள் மேற்கொள்வதற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து நிலைநிறுத்திக் கொண்டு வருகிறது.

2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் அமெ ரிக்க டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கினை விரைவில் அடைவதற்காக, அதிக முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்பு களை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை பல்வேறு முயற்சி களை மேற்கொண்டு வருகிறது.

**ஜனவரியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு!**

அம்முயற்சிகளுக்கு மகுடம் சூட்டும் வகை யில், 2024ஆம் ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை சிறப்பான முறையில் நடத்திட உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

**கோத்ரேஜ் குழுமம்!**

கோத்ரேஜ் குழுமம் 125 வருட பாரம்பரி யம் கொண்ட ஒரு பெருங்குழுமம் ஆகும். உலகளவில் பல்வேறு வணிகங்களை மேற்கொண்டுவரும் இக்குழுமம், சுமார் 120 கோடி நுகர்வோரின் ஆதரவைப் பெற்றுள் ளது. இந்நிறுவனத்தின் நிகர வருமானம், ரூ.7667 கோடி ஆகும். இந்நிகர வருமானம் சுமார் 85 நாடுகளிலிருந்து ஈட்டப்பட்டுள்ளது.

**கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம்!**

கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவ னம், கோத்ரேஜ் குழுமத்தின் ஒரு அங்கமா கும். நுகர்வோர் தயாரிப்புகளில் இது ஒரு வளர்ந்து வரும் சந்தை நிறுவனமாகவும் திகழ்கிறது.

இந்நிறுவனம், இந்தியாவில் 33 இடங் களில் தனது உற்பத்தி அலகுகளை நிறுவியுள் ளது. தமிழ்நாட்டை பொறுத்தவரை, செங்கல் பட்டு மாவட்டத்தில் உள்ள மறைமலை நகரில் ஒரு உற்பத்தி மையத்தினை நிறுவி யுள்ள இந்நிறுவனம், மேம்பட்ட உற்பத்தி மையத்தின் ஒரு சிறப்புமிக்க நிறுவனம் என்பதை இலக்காகக் கொண்டு ஒரு புதிய அதிந வீன உற்பத்தி ஆலையை நிறுவ திட்டமிட்டுள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்!**

இந்நிறுவனம், செங் கல்பட்டு மாவட்டத்தில், 515 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 446 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சோப்புகள், முகஅழகு க்ரீம்கள், தலை முடி பராமரிப்பு சாதனங் கள் மற்றும் கொசு ஒழிப் பான் போன்றவற்றிற்கு ஒரு உற்பத்தி மையத்தை நிறுவ உள்ளது. இந்த திட் டத்தில், 50 சதவிகிதம் அளவிற்கு பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உள்ளதாகவும். மேலும், திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக் கும் வேலைவாய்ப்பு அளிக்க உள்ளதாகவும் இந்நிறுவனம் தெரிவித் துள்ளது. இது புத்தாக்கம் மற்றும் நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சியை ஊக்கு வித்திடும் வகையில் நிறுவப்படவுள்ளதாக கோத்ரேஜ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தை நிறுவுவதற்கு, தமிழ்நாடு அரசிற்கும் கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்திற்கும் இடையே முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றைய தினம் மேற்கொள்ளப் பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக் குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலை மைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலு வலர் வே.விஷ்ணு, கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் செயல் தலைவர் திருமதி நிசாபா கோத்ரேஜ், மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலு வலர் சுதிர் சீதாபதி, தலைவர் – நிறுவனங்கள் விவகாரம் ராக்கேஷ் ஸ்வாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (10.8.2023) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டத்தில் 515 கோடி ரூபாய் முதலீட்டில் 446 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு அரசு மற்றும் கோத்ரேஜ் குழுமத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, கோத்ரேஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் செயல் தலைவர் திருமதி நிசாபா கோத்ரேஜ், மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் கதிர் சீதாபதி, தலைவர் – நிறுவனங்கள் விவகாரம் ராக்கேஷ் ஸ்வாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## சாமானியர்களின் கோபத்தால் சரிந்த பாண்டியன் செங்கோல் பற்றி அறிவீர்களா?

# இந்திய மக்களை ஒன்றாக மதிக்கத் தெரியாத நீங்கள் தேசியவாதிகளா?

## மக்களவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஒன்றிய அரசின் மீது கனிமொழி கருணாநிதி கடும் குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, ஆக.11-**

**“சாமானியர்களின் கோபத்தால் சரிந்த பாண்டி யன் செங்கோலைப் பற்றி அறிவீர்களா? தேசத்தின் அனைத்து மக்களையும் ஒன்றாக மதிக்கத் தெரி யாத நீங்கள் தேசியவாதிகளா?” என்று நாடாளு மன்ற மக்களவையில் கழக குழுத் தலைவர் கனி மொழி கருணாநிதி ஒன்றிய அரசை கடுமையாக சாடினார்.**

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அர சுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது நாடாளுமன்ற தி.மு.க. குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது :-

“இந்த சுதந்திரம் நம் மீது பெரும் பொறுப்பு களை சுமத்திவிட்டுச் சென்றுள்ளது. ஏதேனும் தவறு நேர்ந்தால் இதற்கு பிரிட்டீஷ் ஆட்சியாளர் கள் காரணமாகமாட்டார்கள் என்ற டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கரின் கருத்துடன் இந்த உரையை தொடங்குகிறேன். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை தி.மு.க. சார்பாகவும், நான் சார்ந்த இந்தியா கூட்டணி சார்பாகவும் ஆதரிக்கிறேன்.

**இரட்டை இன்ஜின் அரசு இரட்டை பேரழிவு அரசு!**

ஒரு மாநிலத்தைக் காப்பாற்ற நீதித்துறை தலை யிட வேண்டியிருக்கிறது. இது ஒன்றிய அரசுக்கு வெட்கக் கேடான செயல் இல்லையா? ஒன்றியத்திலும் பா.ஜ.க. அரசு மாநிலத்திலும் பாஜக அரசு என்பதை டபுள் இன்ஜின் அரசு என்று சொல்லிக் கொள்ளும் பாஜக இதை மணிப்பூரிலும் சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டது. ஆனால், இந்த டபுள் இன்ஜின் அரசு டபுள் எட்ஜூடு அதாவது இரு முனையிலும் கூரான ஆயுதமாக மணிப் பூரை தாக்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல இரட்டைப் பேரழிவு, இரட்டை முடக்கம் என்ற நிலை யில் மணிப்பூரைக் கொண்டு சென்றிருக்கிறது.

வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு திரும்பிய பிரதமர் மோடி அரிதான நிகழ்வாக நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர் களை சந்தித்தார். ஆனால் நாடாளுமன்றத்துக்கு உள்ளே வந்து மதிப்புக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் பேச மறுக்கிறார்.

மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா அவர்கள் நேற்று முன்தினம் எழுதிய கட்டுரையில் ஜனநாய கம் என்பது நாடாளுமன்றக் கட்டிடத்தின் அழகால் வரையறுக்கப்படுவதில்லை... தேசத்தின் முக்கிய மான பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் விவா திப்பதில்தான் ஜனநாயகத்தின் தரம் இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

’இந்தியா’ கூட்டணி இதற்காகத்தான் மணிப் பூர் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தது. பா.ஜ.க. அதை எதிர்க்கிறது.

மணிப்பூரில் 170 பேர் கொல்லப்பட்டிருக்கிறார் கள். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்திருக் கிறார்கள். அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் இருப்பிடங்களில் இருந்து இடம் பெயர்ந்தி ருக்கிறார்கள். 3500 வீடுகள் எரிக்கப்பட்டு விட்டன. இரு தரப்பிலும் மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டிருக்கிறார்கள், பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மணிப்பூர் முதல்வரின் வெட்கக் கேடான விளக்கம்!**

மூன்று மாதங்களாக நடக்கும் இந்த கலவ ரத்தை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை என்று மணிப்பூர் மாநில முதல்வரிடம் கேட்டால், ‘இரண்டு சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள் கிறார்கள். அரசு தந்தையை போல செயல்பட்டு இருதரப்புக்கும் இடையே பேசிக் கொண்டிருக் கிறது’ என்கிறார். இப்படி சொல்வதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

மணிப்பூர் மாநிலம் பொதுமக்கள்போலீஸ் விகி தத்தில் இந்தியாவிலேயே உயர்ந்த நிலையில் இருக்கிறது. 161 மத்திய கம்பெனி போலீசார், அசாம் ரைபிள் படையினர் உட்பட மணிப்பூரில் இருக்கிறார்கள். ஆனாலும் அரசு மக்களைக் காப் பாற்றத் தவறிவிட்டது. பிரதமரின் மவுனமும், மணிப்பூர் அரசின் செயலற்ற தன்மையும் மணிப் பூரில் வீடுகள் எரிக்கப்படவும், போலீஸாரே சூறை யாடலில் ஈடுபடுவதையும், மக்களே ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாவதையும் தொடரச் செய்திருக்கிறது. பெண்களை ஆணவ அணிவகுப்பு நடத்தி பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியிருக் கிறது.

இந்த டபுள் இன்ஜின் அரசு கைகளைக் கட்டிக் கொண்டு சகோதரர்கள் சண்டையிடுவதைப் பார்த்துக் கொண்டே இருந்திருக்கிறது.

**கண்ணகியின் கோபம் பற்றி தெரியுமா?**

**“நீங்கள் புதிய நாடாளுமன்றத்திற்கு செங்கோலைக் கொண்டு வந்து வைத்துள் ளீர்கள். சோழர்களின் செங்கோல் என்றும் சொல்லிக் கொள்கிறீர்கள். நீங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை முறையாக அறியவில்லை. சாமானி யர்களின் கோபத்தால் சரிந்த பாண்டியன் செங் கோல் பற்றி அறிவீர்களா? கண்ணகியின் கோபம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?”**



**வன்முறை கும்பலிடம் பெண்களை பிடித்துக் கொடுத்த மணிப்பூர் போலீஸ்!**

மணிப்பூரில் இரு பெண்கள் பாலியல் வன்மு றைக்கு ஆளாக்கப்பட்டு நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்ட அந்த வீடியோதான் தேசத்தின் மன சாட்சியையும் உலகத்தின் மனசாட்சியையும் ஒரு சேர உலுக்கியது. 21 வயது இளம்பெண்ணின் தந்தையும், சகோதரரும் அவளைக் காப்பாற்ற போராடியபோது கொல்லப்பட்டனர். வன்முறை கும்பல் அந்த குடும்பத்தை பிடித்தபோது அந்த குடும்பத்தினர் அங் கிருந்த போலீஸ் ஜிப்சியை நோக்கி ஓடி யிருக்கிறார்கள். அவர்கள் போலீஸ்காரர் களிடம், ‘எங்களை போலீஸ் ஜிப்சியில் ஏற்றி எங்காவது பாதுகாப்பான இடத்தில் கொண்டு போய் விட்டுவிடுங்கள்’ என்று பிச்சையெடுப்பதைப் போல போலீசாரி டம் கெஞ்சியிருக்கிறார்கள். ஆனால் போலீஸ் அந்த குடும்பத்தின ருக்கு உதவ மறுத்துவிட்டது. மாறாக அந்த பெண்ணை வன்முறை கும்பலிடமே ஒப்படைத்திருக்கிறது போலீஸ். அதன் பிறகுதான் அந்த பெண்ணின் தந்தையும் கொல்லப்பட்டார், சகோதரரும் கொல்லப்பட்டார்.

மணிப்பூர் மாநில போலீஸ், மணிப்பூர் மாநில மகளிர் ஆணையம், தேசிய மகளிர் ஆணையம் என எல்லா அமைப்புகளும் மௌனமாக இந்த கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருந்தன. அந்த வீடியோ மட்டும் வெளியாகாமல் போயிருந் தால் இந்த கொடுமைகளை எல்லாம் ஒன்றுமே நடக்காதது போல் மூடி யிருப்பார்கள். அதிர்ஷ்டவ சமாக அந்த வீடியோ வெளியானதால் உண்மை நிலவரம் தெரிய வந்தது.

அந்த வீடியோ வெளியான பிறகுதான் அந்த கும்பலில் இருந்த ஐந்து, ஆறு பேர் கைது செய் யப்பட்டார்கள். ஆனால் அந்த பெண்ணை வன் முறை கும்பலிடமே பிடித்துக் கொடுத்த அந்த போலீஸ் காரர்கள் மீது இதுவரை என்ன நடவ டிக்கை எடுக்கப்பட்டது? ஏன் இதுவரை எடுக்க வில்லை. நேற்றுவரை மணிப்பூர் அரசு இந்த விஷயத்தில் மௌனமாகத்தான் இருக்கிறது. எதையுமே செய்யவில்லை.

**மகாபாரத திரவுபதியும் மணிப்பூர் திரவுபதிகளும்!**

இங்கே பேசிய உறுப்பினர்கள் மகாபாரதத்தில் வரும் திரவுபதியை சுட்டிக் காட்டிப் பேசினார்கள். (குறுக்கீடு) மணிப்பூர் பெண்களும் அதேபோல தங்களைக் காப்பாற்றுமாறு கடவுளிடம் வேண்டி னார்கள். கடவுளும் உதவ வரவில்லை, அரசும் வரவில்லை. மகாபாரதத்தை ஒழுங்காக படித்த வர்களுக்கு தெரியும்... திரவுபதி விவகாரத்தில் குற்றம் செய்தவர்கள் மட்டுமல்ல, அதைப் பார்த் துக் கொண்டு மரம் போல நின்றிருந்தவர்களும் தண்டிக்கப்பட்டார்கள். மணிப்பூர் விவகாரத்தில் மட்டுமல்ல ஹத்வாஸ், உனாவ், பில்கிஸ் பானு, ஏன் சமீபத்தில் போராடிய மல்யுத்த வீராங்கனை விவகாரம் வரை மௌனமாக பார்த்துக் கொண் டிருந்தவர்களை இந்த தேசத்தின் தாய்மார்கள் நிச்சயம் தண்டிப்பார்கள்.

மணிப்பூரில் நூற்றுக்கணக்கான நிவாரண முகாம்கள் இருக்கின்றன. அவற்றில் உணவு இல்லை, தண் ணீர் இல்லை, ஒவ்வொரு முகாமி லும் அளவுக்கு அதிகமான மக்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், முறை யான சுகாதார கழிவறை வசதி இல்லை. கூரைகள் ஒழுகுகின்றன. குழந்தைகள் பயத்திலும், பசியிலும் கதறிக் கொண்டிருக்கின்றன. இதற் குப் பெயர்தான் நிவாரண முகாம் களா? இன்னமும் நீங்கள் மக்க ளுக்கு என்ன அடிப்படைத் தேவை என்பதையே உணரவில்லை. உதவி கள் எதுவும் மக்களைச் சென்றடை யவே இல்லை.

முகாமிலே ஒரு பெண், ‘என் மகன் கொல்லப்பட்டதாக சொல்கிறார் கள். அவன் உடலை இதுவரை நான் பார்க்கவில்லை. அவன் கொல்லப்பட் டிருப்பான் என்று நான் நம்ப வில்லை. என்னைப் பார்க்க என்றா வது ஒரு நாள் வருவான்’ என்று நம்பிக்கையாக அந்தப் பெண்மணி காத்திருப்பதை எங்களால் பார்க்க முடிந்தது. இந்த ஒரு அம்மா மட்டுமல்ல... இவரைப் போன்ற ஏரா ளமான அம்மாக்கள் தங்கள் சகோதரரோ, கண வரோ, மகனோ திரும்பி வருவார்கள் என்கிற நம்பிக்கையில் இன்னமும் கண்ணீருடன் காத்திருக்கிறார்கள்.

**அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்!**

ஒரு முகாமிலே இருந்த ஒரு மெய்தீ இன பெண் என்னிடம், ‘நீங்கள் எங்களைப் பார்க்க வருகிறீர்கள். ஆனால் மணிப்பூர் மாநில முதல் வரோ, பிரதமரோ ஏன் எங்களைப் பார்க்க வர வில்லை? நாங்கள் வீடிழந்து நிற்கிறோம், குடும் பத்தை இழந்திருக்கிறோம், வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறோம். எங்களுக்குப் பாதுகாப் பில்லை. எங்கள் கண்ணீரை ஏன் அவர்கள் துடைக்க வரவில்லை’ என்று கேட்கிறாள்.

ஆனால் அவர்களின் கண்ணீரை கவனிக்கா மல் பிஜேபி ஃபேக் நியூஸ் டீமோ, ‘நாங்கள் பிரத மர் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம். நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்?’ என்று ‘இந்தியா’ டீமிடம் கேட்டதாக போலியான தகவல்களை உற்பத்தி செய்து பரப்பிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

தொடர்ச்சி 4ஆம் பக்கம்




முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களின் மூத்த பிள்ளையான **‘முரசொலி’**க்கு (10.8.2023) **82 ஆவது பிறந்த நாள்!**